ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

पद्माकरं दिनकरो विकचं करोति
चन्द्रो विकासयति कैरवचक्रवालम् ।
नाभ्यर्थितो जलधरोऽपि जलं ददाति
सन्तः स्वयं परहिते विहिताभियोगाः ॥

ஸூர்யபகவானானவர் தாமரைத் தடாகத்திலிருக்கும் பத்மங்களை மலரும்படி செய்கிறார். சந்திரனானவன் ஆம்பல் புஷ்பங்களை விகசிக்கும்படி செய்கிறான். கேழ்காமலிருந்தாலும் மேகமானது ஜலத்தைக் கொடுக்கிறது. இவ்விதமே சாதுக்கள் தாமாகவே பிறருக்கு ஹிதத்தைச் செய்வதிலேயே முயற்சியுள்ளவர்களாயிருப்பார்கள்.

தாமரைப்புஷ்பங்கள் தங்களுக்கு சோபையை உண்டு பண்ண வேண்டுமென்று கதிரவனிடம் யாசிக்காவிடினும் எப்படி ஒவ்வொரு தினமும் ஸூர்யன் தன்கடமையாகக் கருதி யாதொரு பிரதிப்பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் அவைகளுக்கு லக்ஷ்மியையளிக்கிறானோ, எப்படி ஆம்பல் மலர்களின் வேண்டுகோளை எதிர்பாராமல் இரவுதோறும் திங்கள் அவைகளுக்குச் சந்தோஷத்தையுண்டு பண்ணுகிறானோ, எங்ஙனம் மேகமானது பிரார்த்தனையை அபேக்ஷிக்காமல் இயற்கையான கருணையால் ஜலத்தை உலகமுழுதும்வர்ஷிக்கிறதோ; இவ்விதமே மஹான்களான ஸாதுக்களும் பிறருடைய அறிவிப்பை யெதிர்பாராமலும், பிரதிப்பிரயோஜனத்தை யபேக்ஷிக்காமலும் அந்தந்த சமயங்களில் தங்களாலியன்ற வரையில் பரோபகாரம் செய்கிறார்கள். இதனால் நாம் அறியவேண்டியது யாதெனின் நம்முடைய சக்திக்கியன்றவாறு யாதொன்றையும் பதிலாகக்கருதாமல் பரோபகாரம் செய்து அதன் பயனை சிரேயஸ்ஸையடைய வேண்டுமென்பதே. சுபம்.

ஆர்யதர்மம்.

ருதிரோத்காரி-௵ ஆவணி-மீ ௧௫௳

தாரித்திரியம் கஷ்டத்திற்கு முக்கியகாரணம்.

दारिद्र्याद्ध्रियमेति ह्रीपरिगतः प्रभ्रश्यते तेजसः
निस्तेजाः परिभूयते परिभवान्निर्वेदमापद्यते ।
निर्विण्णश्शुचमेति शोकपिहितो बुद्ध्या परित्यज्यते
निर्बुद्धिः क्षयमेत्यहो निधनता सर्वापदामास्पदम् ॥

மனிதர்களுக்கு தாரித்தரியம் மேலிட்டால் அதுவே முறையே மரணபரியந்தமுள்ள ஆபத்திற்கு இடமாகிறதென்று நிரூபிக்கிறார்.

தாரித்தரியத்தால் அவமானத்தை யடைகிறான். அதாவது தனக்கு வேண்டிய செலவுகளுக்கு திரவியமில்லாதபடியால் பிறரிடம் யாசிக்கவேண்டியிருக்கிறதே யென்று அதில் லஜ்ஜை உண்டாகிறது. இவ்விதமவமானத்தையடைந்தவனுக்கு இயற்கையாயிருக்கும் சரீரதேஜஸ்ஸு குன்றிவிடுகிறது. சரீரத்திலும் முகத்திலும் காந்தியில்லாமல் அவலக்ஷணமாயிருந்தால் இவனைப்பார்ப்போர் பலர் தமக்கு அவனைப்பார்த்தால் பீடையுண்டாகுமென்று அவர்களிடம் வரும்பொழுதே அவமதிக்கிறார்கள். அடிக்கடி ஏற்படும் இந்த அவமானத்தால் நிர்வேதம் ஏற்படுகின்றது. பலபேரிடம்போய் யாசிக்கிறபடியால் அவர்களால் சொல்லப்படும் கொடூரவார்த்தைகளைக் கேட்க வேண்டியிருக்கிறது. இனி நாம் ஒருவரிடம்போய் யாசிப்பதில்லையென்று ஒழிவையடைந்து விருத்தியை விட்டுவிடுகிறான். இவ்

விதம் நிர்வேத முண்டானுல் பொருளில்லாததனுல் காரியங்கள் நடைபெருமலிருக்கும் பொழுது துக்கமடைகிருன். அதிக துக்கமேற்பட்டால் அது புத்தியெங்கும் வியாபித்து அதைக் கெடுத்து விடுகின்றது. சகல விதமான காரியங்களுக்கும் முக்கியகாரணமாய் விளங்கும் புத்தி கெட்டவுடன் நன்மை தீமையறிய இயலாது, ஹிதாஹிதமறியாது, அறிவுகுன்றி தன் சரீரத்திற்கு அபாயகரமான காரியத்தையும் செய்து நாசமடைகிருன். என்னே வறுமையின் கஷ்டம்! வறுமையானது நாளடைவில் சகல கஷ்டங்களையும் விளைவித்து முடிவில் சரீரத்துக்கு மரணத்தையும் கொடுத்துவிடுகின்றது. ஆகையால் இதைவிலக்கமுயலவேண்டுவது முக்கியம். முன் ஜன்மாவில் நம்மால் செய்யப்பட்ட கெட்டகர்மாவின் பயனுக இந்த ஜன்மாவில் இவ்விதகஷ்டம் நேர்ந்திருக்கிறபடியால் அதற்குப் பரிகாரமாக சாஸ்திரங்களிற் கூறப்பட்ட ஸத்கர்மாக்களை பெரியோரின் வாயிலாக விசாரித்து அனுஷ்டிப்போமானுல் இந்த ஜன்மாவிலேயே லக்ஷ்மீகடாக்ஷம் ஏற்படலாம். ஒருசமயம் கொஞ்சம் தாமதித்தாலும் அடுத்த ஜன்மாவில் நிச்சயமாய் சிரேயஸ்ஸையடையலாமென்பது திண்ணம். இதனுல் நாம்கெட்டகர்மாவைச் செய்தால் அதிககஷ்டத்தை யனுபவிக்க வேண்டியிருப்பதால் இனி அவ்விதம் செய்யாது ஸன்மார்க்கத்திலே செல்லவேண்டுமென்றும் அதிலும் நம்புத்தியையே பெரியதாய்க் கொண்டு தோன்றியுவாறு செய்வதே நமது சிரேயஸ்ஸுக்கு காரணமென்று நினைத்து அவ்வாறு நடத்திக் கெட்டுப் போகாமல் சாஸ்திரார்த்தங்களையும் பெரியோர்களான மஹான்களுடைய அபிப்பிராயங்களை முக்கியமாய்க்கொண்டு அவ்விதமே பக்தியாய் அனுஷ்டித்துவந்தால் ஸ்ரீலக்ஷ்மீபதியானகண்ணனுடைய அனுக்கிரகத்திற்கு பாத்திரளாக ஆகி சகலமான சிரேயஸ்ஸையுமடையலாமாகையால் இவ்வித ஸங்மார்க்கத்தில் பிரவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவ்வருஷத்திய ஸாமோபாகர்ம கால நிர்ணயம்.

இவ்வருஷத்தில் நாளது ஆவணி-மீ 27வ புதன்கிழமை (செப்டம்பர்-மீ 12வ) வாக்கூடிய யதோக்தமான ஸிம்ம பாத்ரபத ஹஸ்தநக்ஷத்திரத்திலேயே ஷஷ்டி ஸாமசாகாதிபதியான குஜன் அஸ்தமனமடைந்திருந்தபோதிலும், சாந்தி பூர்வகமாய் ஸாம வேதிகள் உபாகர்மா செய்யவேண்டும்.

ஆனால் சிலவித்வான்கள் ஸிம்ம பாத்ரபத ஹஸ்தத்திற்கு அஸ்தமனாதி தோஷங்கள் ஸம்பவிக்குமானால் கன்யாமாஸ அபர பக்ஷ ஸாயங்கால த்ரிமுகூர்த்த வ்யாபினியான ஹஸ்தநக்ஷத்திரத்தில் உபாகர்மா செய்யவேண்டுமென்ற அநார்ஷமானதும் ஸ்பஷ்டமில்லாததுமான ஸங்கிரஹ வாக்யத்தை (ப்ரமாணமாய்க்கொண்ட வைத்யநாத தீக்ஷிதருடைய நிகத வாக்யத்தை) அநுஸரித்து அபரபக்ஷமென்ற சாமான்யவசனத்தில் அந்தர்கதமான அமாவாஸ்யையில் ஹஸ்தநக்ஷத்திரத்தில் ஸாயங்கால த்ரிமுகூர்த்த வ்யாபினியாயிருப்பதால் மகாலயபக்ஷ அமாவாஸையிலேயே ஸாமோபாகர்மா செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இதுதான் அத்வைத ஸபையின் தீர்மானமென்றும் ஆடி-மீ முதல்வாரத்திய "ஆர்யதர்மம்" என்னும் பத்திரிகை தெரிவிக்கிறது. அதைப்பற்றிச் சிறிது ஆலோசிப்போம்.

ஸாமவேதிகளுடைய க்ருஹ்ய ஸூத்திரங்களிலாவது, வாமனகாரிகைகளிலாவது, ருத்ரஸ்கந்தாதி பாஷ்யங்களிலாவது ப்ரஸித்தமான ப்ரயோக பாரிஜாதம் முதலிய க்ரந்தங்களிலாவது, ஆண்டபிள்ளை ப்ரயோகத்திலாவது, முக்யகாலமான ஸிம்மபாத்ரபத ஹஸ்தநக்ஷத்திரம் தவிற கௌணகாலமாகவாவது கன்யாமாஸ அபரபக்ஷ ஹஸ்தநக்ஷத்திரத்தை கிரகிக்கவில்லை. இதற்கு அநுஸாரமான ஸூத்ரங்களையும் வாக்கியங்களையும் ருதிரோத்காரி-ஸு ஆவணி-மீ 8வ ", ஆர்யதர்மம்" 30-வது

இவ்வருஷத்திய ஸாமோபாகர்மகால நிர்ணயம். சுஅன

ஸஞ்சிகையில் மகா-ா-ஸ்ரீ எப். சுப்பிரமணிய அய்யர் அவர்களே தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட கிருஹ்ய வசனங்களையும் கவனிக்குமளவில், பாத்ரபத சுக்லபக்ஷ ஹஸ்தநக்ஷத்திரத்தையே ஸாமோபாகர்மாவுக்கு முக்யகாலமாகவும் சிராவண பௌர்ணமியை கௌணகாலமாகவும் எடுத்துக்கொள்ளவேண்டியதாகும். வாமன காரிகையில் "மாஸே ப்ரோஷ்டபதே ஹஸ்தே பூர்வஸ்மின் த்வயஸம்பவே" என்ற வசனமானது முதல் ஹஸ்தநக்ஷத்திரத்திலேயே உபாகர்மா விதித்து 2-வது ஹஸ்தநக்ஷத்திரத்தை கௌணமாகக்கூட கிரகிக்கவில்லை.

மேற்கண்ட வைத்யநாத தீக்ஷிதருடைய நிகத வசனம் தேசாந்தரங்களில் ஏற்பட்ட அநுஷ்டானத்தை மாத்திரம் தெரிவிப்பதாகக் கொள்ளவேண்டியிருக்கிறது.

மேலும் இவ்வருஷத்தில் கன்யாமாஸ அபரபக்ஷ ஹஸ்த நக்ஷத்திரம் அமாவாஸையன்று வருகிறது. அமாவாஸையோ "அநத்யாயேஷ்வமாப்ரசஸ்தா" "அமாவாஸ்யாகுரும்ஹந்தி" முதலான ஸ்மிருதி வாக்யங்களால் அநத்யயன தினமாக நிஷேதிக்கப் பட்டிருக்கிறது. விதிவாக்யத்தாலோ, அபவாதரூபவாக்யத்தாலோ ப்ரதிப்ரஸவரூப வாக்யத்தாலோ, அமாவை அத்யயனத்திற்கு க்ராஹ்யமாக எடுக்க வழியில்லை. ஆனால் அபரபக்ஷமென்ற ஸாமான்ய வசனத்தால் ஸமஷ்ட்யாஹ்வான நியாயமாக லக்ஷணையால் அமாவாஸையைக் கிரகிக்கலாமென்றாலோ, ப்ருதங் நிர்தேச நிஷேத ரூபமான ச்ருதி ஸ்மிருதி வாக்யங்களால் ஏற்பட்ட விசேஷ நிஷேதத்தை ஸாமான்ய வசனம் எவ்விதம் பரிகரிக்கும்? ஸாமான்ய விதியை விசேஷ நிஷேதவாக்யம் நிஷேதிக்குமேயொழிய விசேஷ நிஷேதத்தை ஸாமான்யவிதி பாதிக்காது. உதாரணமாக மனுஸ்மிருதியில் சுக்லபக்ஷத்தில் அத்யயனம் செய்யவேண்டும் என்று ஸாமான்ய விதி ஏற்பட்டிருக்கிறது. அஷ்டமீ, சதுர்தசி, பௌர்ணமி, அமாவாஸை, அநத்யயன காலமாய் விசேஷமாய் நிஷேதிக்கப்

பட்டிருக்கிறது. அந்த நிஷேதத்தை பரிகரிக்க ஸாமான்ய விதிக்கு யோக்யதையில்லை, அதே நியாயத்தால் அபரபக்ஷ மென்ற ஸாமான்ய வசனம் அமாவாஸை அநத்யயனமென்ற விசேஷ நிஷேதத்தைப் பரிகரிக்காது.

ஸாமவேதம் ஷட்விம்ச ப்ராம்மணத்தில் ஸோமோத்பத்திக்ரமத்தை ஆக்யாயிகாரூபமாய்சொல்ல ஆரம்பித்த சுருதியானது "தஸ்மாத் அமாவாஸ்யாயாம் நாத்யே தவ்யம் பவதி" என்று அமாவாஸை தினத்தை ஸர்வதா அத்யயனத்திற்கு யோக்யதை யில்லாததாக நிஷேதிக்கிறது. இவ்விதமாய் நிஷேதிக்கப்பட்ட காலத்தை வேறு எவ்வித ப்ரமாணத்தாலும் அங்கீகரிக்க நியாயமில்லை.

பௌர்ணமி அநத்யயன தினமாயினும் யஜுர்வேதிகள் உபாகர்மா செய்வதற்கு பௌர்ணமியே முக்யமாக எடுக்கப்பட்டிருக்கிறதே யென்றால் அஷ்டமி, சதுர்தசி, பௌர்ணமி, அமாவாஸையில் அத்யயனம் செய்யக்கூடாதென்ற ஸாமான்ய நிஷேதத்தை "சிராவண்யாமேவ காரயேத்" என்ற விசேஷ விதியானது பரிகரித்து நிலைபெற்றது.

உபாகர்மா விஷயத்தில் சாகாதிபதியின் பலத்தைக் கவனிப்பதைக்காட்டிலும் சந்திர பலத்தைக் கவனிக்கவேண்டியது அத்யாவசியம். "சந்திரமா மனோபூத்வா ஹ்ருதயம் ப்ராவிசத்" என்ற வாக்யத்தால் வித்யாச்ரயமான மனசுக்கு சந்திரன் அதி தேவதையாகையால் சந்திரபலமே முக்கியம். இக்காரணத்தைக் கொண்டே அமாவாஸை ஷட்விம்ச ப்ராமணத்தில் மேற்சொன்னபடி அத்யயனத்திற்கு அத்யந்தம் அயோக்யமாக ஆக்யாயிகாபூர்வகமாக நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. சந்திரபலத்தை முக்யமாகக்கொண்டுதான் யஜுர்வேதிகளும் பௌர்ணமியில் உபாகர்மா செய்கிறார்கள்.

ஆகையால் ஸிம்ம பாத்ரபத ஹஸ்தத்திற்கு குஜாஸ்தமன தோஷமும், கன்யாமாஸ அபரபக்ஷ ஹஸ்தத்திற்கு அநத்யயன

தோஷமும் ஏற்பட்டிருப்பதில் சுருத்யுக்தமான ப்ரபலதோஷத்தோடு கூடிய அமாவாஸையை விலக்கி க்ருஹ்யகாரர்களால் முக்யமாய் க்ரஹிக்கப்பட்ட ஸிம்மபாத்ரபத ஹஸ்தத்திலேயே சாந்திபூர்வசமாக உபாகர்மா செய்யவேண்டுமென்று என் சிற்றறிவுக்குப் புலப்பட்ட மட்டில் தெரிவித்துக்கொண்டேன்.

சிவகங்கை, சுந்திரசிரௌதிகள்.

திருவாதி டிஸ்டிரிக்ட் முன்சீப் எம். சுப்பிரமணிய அய்யரவர்களால் சென்ற 30-வது ஸஞ்சிகையில் வெளியிடப்பட்ட ஸாமோபாகர்ம விஷயமாயுள்ள

சங்கைகளுக்குச் சமாதானம்.

முதல் பாராவில், "வைத்தியநாத தீக்ஷிதரவர்கள் ஸாமவேதிகளுக்கு காதிர (खादिर) கிருஹ்யம் அல்லது கோபில கிருஹ்யம் என்ற இவ்விரண்டிலொன்றைப் பிரமாணமாக எடுத்துக்காட்டாததினால் சிலருடையவோ அல்லது பலருடையவோ ஆசாரத்தைப் பிரமாணமாகக்கொண்டு தீக்ஷிதரவர்கள் எழுதியிருக்கிறார்களெனத் தெரிகிறது" என்று இவ்விதம் ஊகிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த ஊகம் சரியல்ல. ஏனெனில், உபாகர்மத்தை அவரவர்கள் தங்களுடைய கிருஹ்யத்தில் கூறப்பட்ட காலத்தில் செய்யவேண்டுமென்று,

"उपाकर्म स्वगृह्योक्तकाले कार्यं द्विजातिभिः".

என இவ்வாறு அத்திரி வசனத்தைப் பிரமாணமாகக் காட்டி அவரவர்கள் கிருஹ்யத்தில் வரையப்பட்ட காலத்திற் செய்ய வேண்டுமெனத் தெளிவுற உணர்த்தியிருக்க, ஆசாரத்தை தீக்ஷிதர் பிரமாணமாகக் கொண்டாரென்பது எங்ஙனம் பொருந்

தும்? அவ்வித அபிப்ராயம் தீக்ஷிதருக்கு இருக்குமாயின் அத்திரி வசனத்தையெடுத்துக் கூறியது தவறாகும்.

2. "பராபவ கீலக வருஷங்களில் கன்னியாமாதம் கிருஷ்ணபக்ஷத்திலாவது அல்லது பாத்திரபத கிருஷ்ணபக்ஷத்திலாவது ஹஸ்த நக்ஷத்திரம் வரவில்லை. பாத்திரபத சுக்ல ஹஸ்தத்தில் குஜனுக்கு மௌட்டிய தோஷமிருந்தால், அதற்கடுத்து வரும் ஹஸ்தநக்ஷத்திரம் கன்னியாமாதம் கிருஷ்ணபக்ஷத்தில் வாராமலிருக்கும்பக்ஷத்தில் ஸாமவேதிகள் எப்பொழுது உபாகர்மம் செய்கிறதென்று தீக்ஷிதரவர்கள் கிரந்தத்தில் புலப்படவில்லை" என எழுதப்பட்டுள்ளது.

ஸ்மிருதி கர்த்தர்கள், நாம் எந்தெந்த விதமாக ஊகித்து ஆக்ஷேபிக்கின்றோமோ, அவையனைத்திற்கும் தாங்கள் விடையளிப்பதாக நம்மிடம் ஏவ்வித உறுதிமொழியும் எழுதிவைக்கவில்லை. பலவிடங்களில் அனேக விஷயங்களை அவர்கள் விட்டிருக்கலாம். அவைகளை, "अनुक्तमन्यतोग्राह्यं" "கூறப்படாத விஷயங்களை இதர ஸ்மிருதிகளால் தீர்மானிக்கலாம்" என்றிருப்பதால் அவ்விதம் ஏன் நிர்ணயம் செய்துகொள்ளக் கூடாது? மேலும், முக்கிய காலம் கிடைக்காதபக்ஷத்தில், கௌணகாலத்தில் அது தோஷமுள்ளதாயிருப்பினும் பரிகாரம்செய்து அனுஷ்டிக்கின்றோம். இதற்கு வைத்தியநாத தீக்ஷிதரின் அபிப்ராயம் வேண்டுவது அனாவசியம். இதனால் வைத்தியநாத தீக்ஷிதீயம் பிரமாணமல்லவென்று கூறவும் இடமில்லை. ஆகவே இரண்டாவது பாராவால் பிரகிருதத்திற்கு யாது உபயோகமென்று நன்கு விளங்கவில்லை.

3. பராபவ வருஷத்தில் சுக்கிலப்பிரதிபத்தில் ஹஸ்தம் போய்விட்டபடியால் மௌட்டிய தோஷமுள்ள ஹஸ்தத்தில் உபாகர்மம் செய்திருக்கிறார்கள்,

"हस्तर्क्षमुदयेशुक्ले त्रिमुहूर्तास्तगेऽसिते"

என்பதால் பரஹஸ்தத்திற்கு கிருஷ்ணபக்ஷ ஸம்பந்தமிருக்கின்றது. பிரகிருதத்தில் அவ்விதமில்லை.

4. பராபவ வருஷத்தில் புரட்டாசி மாதக் கடைசியில் உபாகர்மம் செய்யாததற்குக் காரணம், அது மத்தியிலே வியவதானம் ஏற்பட்டமையால் செய்யப்படவில்லை.

5. குருசுக்கிர மௌட்டியத்தைப் போலவே அங்காரக மௌட்டியத்தையும் உபாகர்மானுஷ்டானத்திற்கு பாதகமாகக் கூறவில்லையாகையால், மௌட்டியத்தைக் கவனிக்காமல் உபாகர்மம் செய்யலாமென ஓர் ஊகம் செய்திருக்கின்றது.

இதுவும் சரியல்ல ஏனெனில்,

ऋग्यजुस्सामाथर्वेशा जीवशुक्रकुजेन्दुजाः ।
शाखाधीशे शक्तियुक्ते तच्छाखाध्ययनं शुभम् ॥

என்கிற வசனங்களால் இருக், யஜுஸ், ஸாம், அதர்வ என்ற இந்நான்கு வேதங்களும் முறையே குரு,சுக்கிரன்,அங்காரகன், புதன் ஆகிய இவர்கள் சாகாதீசர்களெனவும், அந்தந்த சாகாதீசர்கள் சக்தி பெற்றிருக்கும் காலத்திற்றான் அந்தந்த சாகையை அத்தியயனம் செய்யவேண்டுமெனவும் வெளியாகின்றது. இதனால் அந்தந்த சாகாதீசன் மௌட்யாதி தோஷங்களால் சக்தியற்றிருப்பானாகில் வேதாத்யயனம் கூடாதென்று ஏற்படுவதால், அங்காரக அஸ்தமனத்திலும் கூடாதென்றே ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால்,

"यज्ञोपवीतं कर्तव्यं श्रावणे गुरुशुक्रयोः । बाल्ये मौढ्येपि"

என்கிற வசனத்தால் குரு சுக்கிர மௌட்டிய தோஷத்தைமாத்திரம் கூறி அவ்விதமிருந்தாலும் அவசியம் செய்யவேண்டுமென்று கூறியிருப்பதுபோல் அங்காரக தோஷத்தையும் வேறாகப்பிரித்துக் காட்டாதபடியால் அங்காரக தோஷத்திற்குப்பாதகமில்லையென நினைப்பதும் பொருந்தாது. சிராத்தகண்டத்தில் பொதுவாய் குரு சுக்கிரர்களுக்கு மௌட்டியம் ஏற்பட்டால் சிற்சில கருமங்கள் செய்யக்கூடாதென்று நிஷேதித்திருப்பதைக் கொண்டு செய்யாமல் விடுவதுபோல் உபாகர்மத்தையும் செய்யாமல் விடக்கூடாது.

தோஷமிருப்பினும் சாந்தி செய்தாவது அவசியம் அனுஷ்டிக்கவேண்டுமென்று அறிவிக்கவேண்டி, (यज्ञोपवीतम्) என்று அதற்கு பாதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முற்கூறிய "शाखाधीशे शक्तियुक्ते" என்கிற வசனார்த்தத்திற்கு பாதகத்தையோ அல்லது வேறு விதமான கருத்தையோ சொல்வதற்கு அற்பமேனும் இடமில்லையென்பது திண்ணம்.

6. கிருஹ்யத்தில் பாத்திரபாத பூர்வஹஸ்தத்தில் செய்ய வேண்டுமென்றும், அதுதான் முக்கிய காலமென்றும் உத்திர ஹஸ்தம் எப்பொழுதும் நேராததால் அது கௌணகாலமாக ஆகக்கூடாதென்றும் ச்ராவணீ பௌர்ணமி தான் கௌணகாலமாக ஆகவேண்டுமென்றும் எழுதப்பட்டுள்ளது. அதுவும் அங்கீகரிக்கத்தக்கதல்ல.

"श्रावणादि वार्षिकं प्रौष्ठपदीं वा उपाकृत्य"

என்கிறவிடத்து "प्रौष्ठपदहस्ते" என்று சொல்லவேண்டியிருக்க "प्रौष्ठपदीम्" என்று இரண்டாம் வேற்றுமையுடன் கூறியிருப்பதால் பல ஸ்மிருதிகளுக்கு உசிதமான கருத்தைக் கொள்ள வேண்டுமென்று அபிப்பிராயம் கொண்டு இவ்விதம் கூறியிருக்கிறார் என்று கிருஹ்யத்தில் சொல்லப்பட்டுள்ளதாலும், அங்கு இரண்டாவது முதலான ஹஸ்தத்தை கிரகித்திருப்பதாலும் தோஷமின்றி சம்பவிப்பதை கௌணகாலமாகக்கொள்ளவேண்டுமென்றிருக்க அதைக்கவனியாது ஓரிடத்திலுமில்லையெனச் சாதிப்பது விருத்தி கிரந்தத்தைப் பார்க்கச் சமயம் நேராததாலென்று தெரிகிறது.

7. "உபாகர்மத்திற்கு தோஷம் ஏற்பட்டால் பிந்தின ஹஸ்தத்தில் செய்யவேண்டுமென விதியில்லை. தீட்டு வந்துவிட்டால்மேல் ஹஸ்தத்தில் செய்கின்றதைக்கொண்டு அதை கௌணகாலமாக ஏற்படுத்தக்கூடாது" எனவும் கருதுகின்றார்.

ஆசௌசத்தால் தடையேற்பட்டதினால் கர்மாவுக்கு பாஹ்ஸ்தம் காலமாக வந்தது. முதல் ஹஸ்தத்திற்கு ஒருவித சம்

பக்ஷமும் ஏற்படாத பக்ஷத்தில் இது கௌணகாலமாக ஆகமாட்டாது. ஆகையால் இம்மாதிரி காலங்களில் இரண்டாவதை கௌணகாலமாக ஒத்துக்கொள்ளவேண்டும்.

8. "வர்ணாசிரமத்தில்",

"हस्तर्क्षमुदयेशुक्ले त्रिमुहूर्तास्तगेऽसिते"

என்று சங்கிரஹ வசனமிருக்கின்றது. இதனால் பூர்வ ஹஸ்தத்தில் தோஷமிருந்தால் உத்திர ஹஸ்தத்திலென்றும் அதிலும் தோஷமிருந்தால் பர ஹஸ்தத்திலென்றும் கருத்துக்கொள்ளக் கூடாது. ஏனெனில் இதனால் கௌணகாலத்தையோ மாஸகாலத்தையோ கூறவில்லை" என்ற காரணத்தைச்சொல்லுகிறார்கள்.

மேற்காட்டிய வர்ணாசிரமத்தில் "हस्तर्क्षमुदयेशुक्ले" என்கிற வசனத்திற்கு முன்னர் பிரௌஷ்டபதமாதத்தைக் கூறியிருப்பதால் அவ்விதம் இல்லையென மறுப்பது ஒரு சிறிதும் அமையாதென்க. இது, ஆசௌசம், கிரகணம் சங்கராந்தி இவற்றிற்கு மாத்திரமேற்பட்டதென்று எழுதியிருப்பதும் பூர்வ சந்தர்பத்திற்கு பாதகமாயிருப்பதால் அங்கீகரிக்கத்தக்கதல்ல. இவ்வசனம் கௌணகாலத்தைப் போதிப்பதாயிருப்பினும் இருக்வேதியர்களுக்கேயன்றி ஸாமவேதிகளுக்கல்லவெனக்கூறுகின்றார். இதுவும உசிதமல்ல. கௌணகாலத்தை போதிக்கும் பிரத்தியக்ஷ வசனமானது ஸ்பஷ்டமாகவிருக்கும் பொழுது வியாபக வசனமில்லையென்பது நன்கு கவனிக்காததாலென்று தெறிகின்றது.

9. மௌட்டிய தோஷத்திற்குபிராயச்சித்தம்சொல்லாதபடியால் அந்ததோஷம் கவனிக்கத்தக்கதல்லவென்று அபிப்பிராயப்படுகின்றார். இவ்விதம் கூறுவது

'शाखाधीशेशक्तियुक्ते' 'यज्ञोपवीतं कर्तव्यं'.

என்று இவ்வாறு மௌட்டியதோஷத்தை அங்கீகரிக்கும் ஸ்மிருதிக்கு விரோதமாகும்.

10. சாகாதீசன் பலவானாயிருக்கும்பொழுது உபாகர்மம் செய்யவேண்டுமென்கிற வசனத்தை விதியாக ஒப்புக்கொண்

டால் இரண்டுகாலங்களிலும் தோஷமேற்பட்டால் உபயோக மில்லாமல் போய்விடுமென்று கூறப்பட்டிருப்பதும் சரியல்ல. இரண்டும் தோஷமுள்ளதாக விருக்குமாகில் முக்கியகாலத்தில் சாந்தியைச் செய்து அனுஷ்டிக்கலாமென்று விதியிருப்பதால் அக்காலத்தில் செய்யலாம்.

11. இவ்வருஷத்தில் முதல் ஹஸ்தம் மௌட்டியதோஷ முள்ளதாக விருப்பதால் 2-வது ஹஸ்தத்தில் உபாகாணம் செய்யவேண்டுமென்பதும் சரியல்ல. அந்ததிதியில் அமாவா சையுமிருப்பதால் அது அநத்தியயனதினமாதல் பற்றி அன்று உபாகர்மம் செய்யக் கூடாதென அபிப்பிராயப்படுகின்றார். இதுவும் உசிதமல்ல

" हस्तर्क्षमुदये शुक्ले त्रिमुहूर्तास्तगेऽसिते "

என்று ஸ்மிருதியில் கௌணகாலத்தை போதித்திருப்பதால் அநத்தியாயகாலம் அதற்கு பாதகமாகமாட்டாது.

12. "முந்தினஹஸ்தத்திற்கு மௌட்டியதோஷமும் பிந் திய ஹஸ்தத்திற்கு அநத்தியாய தோஷமுமிருந்தால் முந்தி செய்யக்கூடாது. பிற்பாடு தான் செய்யவேண்டுமென்று சொல் வதற்கும் விதியில்லை." என்று கூறுவதும் பொருந்தாது. உபா கர்மானுஷ்டானத்திற்கு அநத்தியயன தோஷத்தைப் பார்க்க வேண்டுமென்று ஒருவராலும் கூறப்படவில்லை. கிருஹ்யத்தி லிருக்கும் நிஷேதமானது அத்தியயனத்திற்கேயன்றி உபாகர் மத்திற்கில்லை யென்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

13. ஸ்ரீனிவாஸசாஸ்திரிகளின் தீர்மானப்படி குஜமௌட் டியமிருந்தாலும் பூர்வஹஸ்தத்தில் செய்யவேண்டுமென்றும், அன்றேல் சிராவணியில் வரும் பௌர்ணமியில் செய்யவேண்டு மென்றும் தங்களைப்போன்ற தீர்மானத்தின் உண்மையை அறிந்தவர்களுக்கு அபிப்பிராயமிருக்கலாம். தர்மசாஸ்திரங்க ளில் உட்புகுந்து நன்கு சஞ்சாரம் செய்தவர்களுக்கு தங்கள் சித்தாந்தமானது பிரமாணமாகமாட்டாதென்று தோன்றும்.

நம் அபிப்பிராயத்தைத்தெரிவித்து இத்துடன் இவ்விஷயத்தை முடித்துக்கொள்கின்றோம். சுபம்.

கூ. சுப்பிரமணியசாஸ்திரிகள்.
மன்னார்குடி. அத்வைத ஸபா தர்மசாஸ்திர பரீக்ஷாதிகாரி.

[குறிப்பு:—இங்கு கூறப்பட்ட ஸமாதனங்களே சிவகங்கை சுந்திரசிரௌதிகள் அவர்களுடைய ஆசங்கைகளுக்கும் ஸமாதானம் ஆகலாமென்று தோன்றுகிறது. ப—ர்.]

இந்துதேச வைத்தியம்.

(சசரு-வது பக்கத்தொடர்ச்சி.)

உழுதுபயிர் செய்யாத நிலத்தில் உபயோகமற்ற புற் பூண்டுகள் ஏராளமாய் விளைவதுபோல் சாஸ்திரரீதியாய் வைத்தியஞ்செய்ய மனிதர்களில்லாத நம் நாட்டில் கால்மாடு தலைமாடாய் வைத்தியர்கள் பலர் தோன்றியிருக்கின்றனர். இவ்வைத்தியர்களெல்லாம் நம் சுதேச வைத்தியத்திற்கே நேர்விரோதிகளென்பதில் ஐயமில்லை.— இவர்கள் புலித்தோலைப் போர்த்துக் கொண்டு சில பயிரிடுங் குடிகளை ஏமாற்றிப் பயிர்களை மேய்ந்து வந்த பசுவைப்போலச் சுதேச வைத்தியர்களென்ற பொய்ப் பெயர் பூண்டு ஜனங்களை ஏமாற்றி வருவதோடு சுதேசவைத்திய சாஸ்திரத்திற்கே ஓர் பெரிய அகௌரவத்தைத் தேடிவைத்து விட்டார்கள். வைத்தியசாஸ்திரம்குருமுகமாய் ஐயந்திரிபறக்கற்றுக்கொள்ளாதுவைத்தியஞ் செய்பவனை அரசன் தயை தாக்ஷிண்ணியம் பாராமல் கண்டிக்க வேண்டுமென்று நம் வைத்திய நூற்கள் கூறுவதாக நாம் முன்பே கூறியுள்ளோம். அந்த விதியை மாத்திரம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தால் அனேக வைத்தியர்களின் நிலைமை மிக ஆயாசத்தில் வந்துவிடுமென்பது நிச்சயம்.

குஜிலிக்கடையில் விற்கும் இரண்டொரு அணுவிற்குக் கிடைக்கக்கூடிய புத்தகத்தை வாங்கி அதில் சொல்லியிருக்கும்

இரண்டொரு பாடல்களை மனப்பாடம் பண்ணிக் கொண்டு பெண்களுக்கும் விஷயமறியாதவர்களுக்கும் மலைப்புண்டாகும்படி வீண் பேச்சுகள் பேசி வைத்யத்தில் தன்வந்திரியும் தனக்குப் பின் மந்திரிதானெனத் தம்மைத்தாமே புகழ்ந்து கொண்டு திரிபவர்களும் வைத்தியர்களாம்! தம்பெயர் எழுதத் தெரியாதவர்களும் படிப்பற்ற பெண்டிர்களுக்கு வைத்தியர்களாக வெளிவந்துலாவும் அறிவீனர்களும் பண்டிதர்களாம்! தங்கள்மேல் ஜனங்களுக்குப் பிரியமுண்டாக வேண்டுமென்ற எண்ணத்துடன் இதரர்களை இகழ்ந்து பேசுபவர்களும் தங்கள் திறமையையேபுகழ்ந்துகொள்ளுபவர்களும்வைத்தியர்களாம்! இம்மாத்திரமோ. தங்களால் சொஸ்தஞ்செய்ய முடியாத வியாதியே கிடையாதென்று கட்டியங்கூறும் நிர்மூடர்களும் வைத்தியர்களாம்! நோயாளி தன் கையை நீட்டியவுடன் தன் வாயில் அக்காலத்தில் என்ன வருகிறதோ அதுதான் அவ்வியாதிஸ்தரின் நோயென்று சாதிப்பவர்களும் அவர்கள்கையிலிருப்பதே அவ்வியாதிக்குற்ற மருந்தென கொடுக்கத்துணியும் புறட்டர்களும் வைத்தியர்களாம்! தங்களால் முடியாத காரியங்களில் பிரபலமான மற்றொருவைத்தியரைத் தாமே அழைத்துக் கொண்டு வந்து காண்பிவித்து அவருடன் கலந்து யோசனை செய்து நோயாளியின் உண்மையான வியாதியைக் கண்டு பிடித்துத் தக்கமருந்து கொடுத்தல் வேண்டுமென்ற ஆயுற்வேத சாஸ்திரத்தை ஒரு சிறிதுமறியாது தன்னைவிடத் தேர்ச்சியடைந்த நிபுணர்களைக் காணுமிடத்துப் பொறாமையென்னும் பேய்பிடித்தாடும் பேடிகளும் வைத்தியர்களாம்! இன்னும் மகாயோகிகளும் சித்தர்களும் அவதாரபுருஷர்களும் ஆதியில் கையாடி வந்ததாக மதிக்கப்படும் நம்வைத்தியசாஸ்திரத்தை அது இவர்களுடைய சிற்றறிவுக் கெட்டாத காரணம் பற்றி வெகுசுலபமென நினைத்துத்தங்களுக்குத் தோன்றியவாறு சிகிச்சைசெய்யத்துணியும் ஞானசூன்யர்களும் வைத்தியபண்டிதர்களாம்!

(தொடரும்)

இந்து வைத்தியாபிமானி.

॥ श्रीः ॥

॥ श्रीशङ्करगुरुभ्यो नमः ॥

त्रिशिरःपुरविराजमानाद्वैतसभापरीक्षाकक्ष्याविभागः॥

प्राथमिकी कक्ष्या ।

रामकृष्णदीक्षितीयसहिताद्वैतपरिभाषा सिद्धान्तलेशसंग्रहश्चेति द्वयं सिद्धान्तबिन्दुः सटीकः संक्षेपशारीरकं एतत्त्रितयान्यतमस्य .... रू.१०—९—८

द्वितीयकक्ष्या ।

सूत्रभाष्यगीताभाष्ययोः १५–१३–११

दशोपनिषद्भाष्यस्य १५–१३–११

मिळितानां १८–१६–१४

तृतीयकक्ष्या ।

वाचस्पत्यं कल्पतरुपरिमलोपेतं पञ्चपादिका विवरणतत्वदीपनसहिता न्यायरक्षामणिश्चेति द्वयं शङ्कर भगवत्पादभूषणं एतत्त्रितयान्यतमस्य २१–१९–१७

तुरीयकक्ष्या ।

अद्वैतसिद्धिः ब्रह्मानन्दीयसहिता २४–२२–२०

कक्ष्याचतुष्टयेऽपि अङ्कतारतम्येन प्रत्येकं त्रैविध्यं बोद्धव्यं । पूर्व पूर्वकक्ष्यापारङ्गतानामेव उत्तरासु प्रवेशः ।

तृतीयतुरीयकक्ष्ययोः खण्डशोऽपि परीक्ष्येत ।

इदञ्चात्रावधेयं ।

केनोपनिषदस्समग्रं गीर्वाण्या भाषया विशिष्य च तत्तृतीयखण्डस्य सविस्तरं ईश्वरनास्तित्वसाधकहेतूपन्यासतन्निरासपूर्वकेश्वरास्ति

त्वव्यवस्थापनप्रकाशकं विरचय्य सभारम्भात्प्रागेव कार्यदर्शिनां सविधं प्रेषयितॄणां मध्ये कस्यचित्प्राथम्येनाङ्गीकृतस्य विदुषः रूप्याणां विंशतिः पारितोषिकत्वेन निरणायीति ।

सभारम्भसमय एव सर्वैर्विद्वद्भिः सन्निधातव्यमित्यभ्यर्थयते ।

R SRINIVASA AIYAR, B.A., B.L., *Secretary.*

आर् श्रीनिवासार्यः, कार्यदर्शी.

உ

ஸ்ரீமகாகணபதயே நம:

இரண்டாவது அத்வைத சபை, திருச்சினப்பள்ளி.

ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யர்களான ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யர் அவர்களால் பரதிஷ்டை செய்யப்பட்ட அத்வைதமதத்தையும் தர்மமார்க்கத்தையும விருத்திசெய்யும் பொருட்டு ஸ்ரீகாஞ்சீ காமகோடிபீடாதிபதிகளான ஸ்ரீஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகள் அனுக்கிரஹத்தை முன்னிட்டு சென்ற வருஷம் ஸ்தாபிக்கப் பட்ட திருச்சி அத்வைத சபையின் இரண்டாவது வருஷத்தின் வித்வத்ஸமாஜம் தற்காலம் திருவானைக்காவல் மடத்தில் விஜயம செய்திருக்கும் ஷை சங்கராசாரிய ஸ்வாமிகள் மஹாஸந்நிதாநத்தில், ருதிரோத்காரிவருஷம் புரட்டாசிமீ 3உ [19-9-23] புதன் கிழமை முதல் 7உ (23-9-23) ஞாயிற்றுக் கிழமைமுடிய ஐந்து நாள் நடைபெறுமாதலால் ஷை சபைக்கு ஆஸ்திகர்களான மதாபிமானிகள் யாவரும் விஜயம் செய்து பரமாசார்யர்களின் அனுக்ரகத்தை பெறுவதுடன் இயன்றவரையில் சபைக்கு தனஸகாயம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருச்சி,
14—8—23.

ரெ. சீனிவாசய்யர்,
காரியதரிசி.